# புலிகளின் பதிலை தொண்டமான் எதிர்பார்க்கிறார்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கு தாம் அனுப்பிய கடிதத்திற்கான பதிலை அவர்களிடமிருந்து தாம் எதிர்பார்ப்பதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.
இ. தொ. கா. சார்பில் தாம் முன்வைத்த யோசனை

(4-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 88 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 14 இதழ்: 261
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 31-10-1991


## கொழும்பு ஹோட்டல்களில் வெளியார் தங்க தடை

(கொழும்பு)
கொழும்பில் நடைபெற இருக்கும் சார்க் மாநாட்டில் பங்குபற்ற வருகை தரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தங்குவதற்காகச் சகல வசதிகளையும் உள்ளடக்கிய உல்

(4ம் பக்கம் பார்க்க)

## இந்திய தூதரகம் விபரம் வெளியிட மறுப்பு

(கொழும்பு)
இந்தியப்பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் சார்க் மாநாட்டுக்கு வந்து கொழும்பில் எவ்வளவு நாட்கள் தங்கு

(4-ம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் தினமும் படையினர் கடத்தப்படுவதாகச் சந்தேகம்!

## 16 படையினரை காணவில்லை

(கொழும்பு)
கிழக்கில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் கடும் மோதல்களில், படையினர் தரப்பில் தினமும் பலர் கடத்தப்படுவதாக அல்லது காணாமற் போவதாகச் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களில் கிழக்கில் இடம்பெற்ற மோதலில் 16 படையினர் காணாமற் போய்விட்டதாகவும், இவர்கள் கடத்தப்பட்டிருக்கலாம் அல்லது கொல்லப்பட்டிருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை மட்டக்களப்பு-திருகோணமலை பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்பட்டு வருகின்ற போதும் புலிகளின் தேர்ந்த அதிரடியில் பல படையினர் பலியுள்ளதாகவும் தெரிவி கொல்லப்பட்டும் காணாமற் கப்படுகிறது. (சி)

## 15 படையினரைத் தேடி காடுகளில் வேட்டை

(கொழும்பு)
வெலிகந்த, தொப்பிகலை பகுதியில் காணாமல் போன 15 படையினரை தேடும் முயற்சியில் பெருமளவு படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இப்பகுதியில் புலிகள் நடாத்திய தாக்குதலில் 14 படையினர் கொல்லப்பட்டதாகவும்

(4-ம் பக்கம் பார்க்க)

## 'புரண்ட்லைன்' மீது பலத்த கண்டனம்

(கொழும்பு)
ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கு எதிராக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்த கருத்தை 'புரண்ட்லைன்' சஞ்சிகை வெளியிட்டதற்கு ஜனாதிபதி செயலகம் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

செப்டம்பர் 24-ம் திகதி பாராளுமன்றம் கூடுவதற்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் க. பொ. த. பரீட்சை நடத்தலாம்

(யாழ்ப்பாணம்)
1991ம் ஆண்டுக்கான க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையை வடபகுதியில் நடத்துவதற்குச் சுமுகமான சூழ்நிலை உள்ளது என யாழ். கல்விப் பணிப்பாளர், யாழ். அரச அதிபர் மூலம் கொழும்புக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இப்பரீட்சையை, வடக்கு-கிழக்கில் நடத்துவதற்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## தேங்காய் எண்ணைக்கு கட்டுப்பாடு இல்லை

(யாழ்ப்பாணம்)
அத்தியாவசிய பொருட்களின் பட்டியலில் இருந்த தேங்காய் எண்ணெய் நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விநியோகம் தொடர்பாக அரசாங்க அதிபர் தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட கூட்டுறவுச் சமாசங்களின் தலைவர்கள் பொது முகாமையாளர்களுக்கான

(2ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் மேலும் நான்கு கடற்படை தளங்கள் அமையும்

(கொழும்பு)
வடபகுதியில் மேலும் நான்கு புதிய கடற்படை தளங்கள் விரைவில் அமைக்கப்படவிருப்பதாக சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இக்கடற்படை தளங்கள் அமைக்கப்படும் இடங்கள் குறித்தோ அல்லது எப்பொழுது அமைக்கப்படும்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீக்கம்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி, பூநகரி உதவி அரசாங்க அதிபர் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளிலிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 6 மணியுடன் நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பமைச்சு நேற்று அறிவித்தது. (வி)

## இராணுவ உதவி குறித்து இலங்கை-சீன ஒப்பந்தம்

(கொழும்பு)
இராணுவ உதவி குறித்து, இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளதாகக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஆனந்த சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அண்மையில் இலங்கை வந்த சீனக் கப்பல் அணி ஒன்றுக்கு, கடற்படைப் பாரம்பரியங்களுக்கு முரணாகக் கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் விருந்துபசாரம் அளித்

(4ம் பக்கம் பார்க்க)

## வீர வணக்கம்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவுப் பகுதியில் நடைபெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் புலிகள் தரப்பில் இளங்கீரன் (பத்மநாதன் - ரஜீவன், தையிட்டி, தற்சமயம் நீதிமன்ற வீதி, மல்லாகம்) நேற்று வீர மரணமடைந்தார். இவருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (வி)

## யாழ். குடா பற்றி கொப்பேகடுவ கூறுகிறார்

(கொழும்பு)
யாழ். குடாநாட்டை இராணுவம் கைப்பற்றுமா இல்லையா என்பது குறித்து பதில் கூற வடபகுதி இராணுவ தளபதி மேஜர்ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ மறுத்துவிட்டார்.

யாழ். குடாநாடு மக்கள் செறிந்து வாழும் ஒரு பகுதியாகும். இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன் உலகில் எந்த இராணுவமும் அந்த நடவடிக்கைகள் குறித்து முன்னறிவித்தல்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் பல்கலைக்கழகங்களில் ஜே. வி. பி. ஆள் திரட்டுகிறது

(கொழும்பு)
தென்பகுதியில் மீண்டும் ஜே. வி. பியினரின் நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகளை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

தென்பகுதியிலுள்ள பல்கலைக் கழகங்களிலிருந்து ஜே. வி. பி. இயக்கத்திற்கு ஆட்கள் தவறாகத் திரட்டப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மீண்டும் சனிமாற்றம்

(28-10-91) சனிமாற்றம் வாக்கியப்படி ரூபா 7/- எல்லா ராசிகளின் பலன்கள் எங்கும் விற்பனையாகின்றன. சோபிதா யாழ்ப்பாணம். (ஓ-5538)

### இலவச திருமண சேவை

C. I. M. A. முன்றும் பகுதி படித்த, தொழில் புரியும் இரகசியமற்ற பெண் வயது 28, கனிஸ்ஸிலுள்ள ஆண் வயது 28, பெண் 25, நோர்வே ஆண் 28, சைவ உணவுக்காரர்கள் பெண் 27, சகோதரங்கள் ஆண் M. Sc. பெண் B Sc ஆகியோருக்கு மணமக்கள் தேவை. 2 உறைகளுக்கு முத்திரை யிட்டு விலாசமெழுதி, குறிப்புக்கள் விபரங்களையும் இணைத்து விண்ணப்பிக்கவும். நேரடித் தொடர்பு: குமிர காலை. தமிழராஜா விமலா, 958/8, K. K. S வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (ஓ-5541)

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### வகுப்பு

02-11-91 சனிக்கிழமை ஆரம்பமாகின்றது. கம்பியூட்டர் வகுப்புக்கள், ரேடியோ, ரீவி, டெக் திருத்துதல், றிவைண்டிங், எலெக்ரிக்கல் வயறிங், Diploma in English, Hotel Management, Engineering Drawing, Diploma in Draughtsmanship, Nce, TOEFL, Basic English, Spoken English. விபரங்கட்கு: Jaffna Technical Institute, தபால்பெட்டிச் சந்திக்கு அருகாமையில், No. 4, பிள்ளையார்வீதி, திருநெல்வேலி. (ஓ-5543)

### தவறிவிட்டது

சிறுப்பிட்டியிலிருந்து நீர்வேலி, கோப்பாய், இருபாலை, கோண்டாவில், திருநெல்வேலி, அரசடி, நட்டாதெரு காளிகோவிலுக்கு வரும் போது சிறுப்பிட்டி அம்மன் கோவில் கும்பாபிஷேக நோட்டீஸில் சுற்றப்பட்டு கைலேஞ்சியில் வைக்கப்பட்டுள்ள 2 1/2 தங்கப்பவுண் சங்கிலி அப்பாறையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருமதி இராமச்சந்திரன் ஜெயலட்சுமி, இல. 57, காளி கோவிலடி, நட்டாதெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (ஓ-5542)

## பாவனையாளர் பாதுகாப்புக் குழு

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலும் பாவனையாளர் பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.. (72)

## பதவி உயர்வு இடமாற்றம்

(கொழும்பு)

'விமலதர்மகுழு' அறிக்கைப்படி சகல அரச ஊழியர்களுக்கும் ஒரே விதமான விதிகளின்கீழ் பதவி உயர்வு, இடமாற்றம் மேற்கொள்ளப்படும்.

இந்தக்குழுவின் அறிக்கை வெகு விரைவில் அமுலுக்கு வரவிருப்பதாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அறிவித்துள்ளார்.

## புதிய 5000 ரூபா நோட்டு

(கொழும்பு)

புதிய ஐயாயிரம்ரூபா நோட்டு புழக்கத்திற்கு வந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி புதிய 500 ரூபா நோட்டை நேற்றிலிருந்து புழக்கத்தில் விட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'இசையருவி' நாடா வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய நாதஸ்வர கானவாரிதி வி. கே. பஞ்சமூர்த்தியின் 'இசையருவி' நாதஸ்வர இசை ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா அடுத்த மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தேவர் வரவேற்புரை நிகழ்த்துவார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் முதல் நாடாவை வெளியிட்டு வைப்பார்.

யாழ். பிராந்திய சிறப்புத் தளபதி தமிழ்ச்செல்வன் கலைஞர்களைக் கௌரவிக்க, விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலதிபர் யோகரட்ணம் யோகி, நாதஸ்வர கலாநிதி என். கே. பத்மநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள்.

பொன் சுந்தரலிங்கம், நவாலியூர் சச்சிதானந்தன், வண பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் பிரம்மஸ்ரீ ந வீரமணி ஐயர், கம்பன் கழகம் இ. ஜெயராஜ் ஆகியோர் சிறப்புரை வழங்க இருக்கிறார்கள். (152)

## அகதிகளை அழைத்துவர ஏற்பாடு

(கொழும்பு)

இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கை அகதிகளில் 33 ஆயிரம்பேரை இலங்கைக்கு அழைத்துவர சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருவதாக புனர்வாழ்வுத் திணைக்கள செயலர் பிரஸ் டி சில்வா தெரிவித்துள்ளார்.

## கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நவம்பர் 2ஆம், 3ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

போருட் நிறுவனம், சர்வோதய இயக்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இக் கருத்தரங்குக்கு யாழ். பிரதேச உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தலைமை தாங்குவார். (72)

## தேங்காய் எண்ணெய்க்கு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடலில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

அங்கு மேற்கொள்ளப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக உலர் உணவு அட்டைக்கு விநியோகிக்கப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை மக்கள் வாராந்தம் பெற்றுக் கொள்ள வேண்டும். ஒரு வாரத்திற்குரிய பொருட்கள் மறு வாரத்தில் சேர்த்துக் கொடுக்கப்படமாட்டாதென்பதையும், வாராந்த விநியோகம் ஒரு வாரத்திற்குள் மக்களுக்கு விநியோகித்து முடிக்க வேண்டும் என்றும் பிந்தியவர்கள், தமது பங்கீட்டுத் தொகைப் பொருட்களை இழக்க வேண்டி நேரிடும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

1991 நவம்பர் தொடக்கம் 5 அங்கத்தவரையும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களையும் கொண்ட குடும்பத்திற்கு தற்போது வழங்கப்படும் 750 கிராம் சீனி 1 கிலோவாக வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.

உணவு முத்திரையை வைத்திருப்போர் அவ்வளவு முத்திரைக்கான பொருட்களையும் மிகுதிப்பொருட்களை அட்டவணையில் குறிக்கப்பட்ட எல்லைக்குட்பட்டு பணம் செலுத்தி கூட்டுறவுச்சங்கங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பாடசாலை மாணவர்களுக்கான மதியஉணவுமுத்திரைக்கு கொள்வனவுசெய்யும் பொருட்கள் இவ்வட்டவணைக்கு புறம்பானதாக அமையும். தற்போது ஜனசவிய திட்டம் யாழ்ப்பாணத்தில் நடைமுறையில் இல்லாதபடியால் ஜனசவியத் திட்டத்தின்கீழ் பயன்பெற்றவர்களுக்கு தற்போதைய வறுமைநிலையைக் கருத்திற் கொண்டு உணவு முத்திரை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அட்டவணையில் குறிக்கப்பட்ட பொருட்களில் ஏதேனும் ஒரு பொருளை பகுதியாக கொள்வனவு செய்துமிகுதியை மீண்டும் கொள்வனவு செய்ய விரும்புவோர், கொள்வனவு செய்த பற்றுச்சீட்டை சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு காண்பித்தல் வேண்டும்.

கிளிநொச்சி அ. அதிபரின் நிர்வாகத்திற்குட்பட்ட பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கமும் (பனை) தற்போது நெருக்கடி நிலையைக் கருத்திற் கொண்டு யாழ். மாவட்ட விநியோக அட்டவணைக்கிணங்க அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு ஒத்துக்கொண்டதுடன், அதற்குரிய பொருட்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரினால் வழங்குவதற்கும் உடன்பாடு காணப்பட்டது.

நெடுந்தீவு வாழ் மக்களின் நன்மை கருதி, அவர்களுக்குக் கப்பல் மூலம் உணவுப்பொருட்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அரிசி ஆலைகளிலிருந்து நாட்டரிசியினைக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்து, பாவனையாளர்களுக்குப் பங்கீட்டு அட்டவணையின் உச்ச எல்லைக்குட்பட்டு வழங்கிட செய்ய அனுமதிக்கப்பட்டது. (152)


DHL... DHL... DHL... DHL...

உலகம் முழுவதுக்குமான துரித தபால் சேவை

யாழ்ப்பாண நகரத்தில் உங்கள் கடிதங்களை பாதுகாப்புடன் ஒப்படைக்க

**DHL International**

C/o Cosmos,

Marketing Services,

120, K. K. S. Road, Jaffna.

(அ 1614)



## London Accountancy Classes

### May - June 1992

| | | | |
|---|---|---|---|
| C. I. M. A. | Stage I | 2nd Nov | 1991 |
| | Stage II | 30th Nov | 1991 |
| A. A. T. | Prelim | 2nd Nov | 1991 |
| [London] | Inter | 30th Nov | 1991 |
| A. A. T. | Level I | 2nd Nov | 1991 |
| [Sri Lanka] | Level II | 30th Nov | 1991 |
| I. A. B. | Foundation | 2nd Nov | 1991 |
| | Inter & | 30th Nov | 1991 |
| | Finals | 30th Nov | 1991 |

(Our Same Panel Includes)

Mr. K. Mauthakumar, Mr. P. Sivaganam, Mr. S. Thilakakumar, Mr. K. Kamalakumar, Mr. S. Narendran and Mr. D. Gnanaseelan

விபரங்கட்கு:

**North Ceylon Technical Institute**

(Result Oriented Institute in North)

வட இலங்கை தொழில்நுட்ப கல்லூரி

14, St.PETER'S LANE, JAFFNA.

(A 1682)


## கலைவிழா

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் கடந்த 18-10-91, 20-10-91 ஆகிய திகதிகளில் நடைபெறவிருந்த

கலைவிழா

எதிர்வரும் 1-11-91, வெள்ளிக்கிழமையும் 3-11-91 ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர்,
பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

(ஓ-5545)

வன்னிப் பகுதியில்

# நெல்லை விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் தவிப்பு

(ஒட்டுசுட்டான்)

வன்னிப்பகுதியில் கடந்த சிறு போக நெல் அறுவடை செய்யப்பட்டிருந்தும் இங்குள்ள விவசாயிகள் தமது நெல்லை விற்க முடியாது திண்டாடுகின்றனர்.

இதனால் இப்பகுதியில் பெருமளவு நெல் தேங்கிக் கிடக்கின்றது.

யாழ் குடாநாட்டிற்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டதினாலேயே யாழ் வர்த்தகர்கள் இங்கு வரமுடியாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

நெல்லை சந்தைப்படுத்த முடியாததினால் விவசாயிகள் மதியில் பணப்புழக்கம் மிகக் குறைந்த நிலையில் இருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. (144)

## ஒத்திவைப்பு

(ஊர்காவற்றுறை)

யாழ் மாவட்ட அரச ஒய்வூதியர் சங்கத்தால் புனித யாகப்பர் ஆலய முன்றலில் கடந்த 27-ம் திகதி நடைபெறவிருந்த விசேட பொதுக்கூட்டம் அடுத்த மாதம் 16-ம் திகதி சனிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (59)

# இந்திய வம்சாவழியினரின் 129 பதவிகள் காலியாகவுள்ளன

(கொழும்பு)

இந்திய வம்சாவழியினருக்காக ஒதுக்கப்பட்ட 129 எழுதுவினைஞர் பதவிகள் இன்னமும் காலியாகவே உள்ளன.

பொதுநிர்வாக சேவையில் இந்திய வம்சாவழியினரையும் தனியாக கணித்து இனவிகிதாசார அடிப்படையில் நியமனங்கள் அளிப்பதற்கான அரச நடைமுறை உண்டு.

இதனை அடிப்படையாகக் கொண்டு எழுதுவினைஞர், களஞ்சியப்பொறுப்பாளர், ரயில்நிலைய அதிபர்கள் போன்ற பதவிகளுக்கு 129 பதவிகள் ஒதுக்கப்பட்டிருந்தும் அவை இன்னமும் அவர்களால் நிரப்பப்படவில்லையென பொது நிர்வாகசேவை அமைச்சின் கூட்டு அரசசேவைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இப்பதவிகட்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது இந்திய வம்சாவழியினரிடமிருந்து போதிய விண்ணப்பங்கள் கிடைக்காமையே இதற்குக் காரணமெனவும் அவர் கூறினார்.

## மாதாந்த உதவிப்பணம்

(மானிப்பாய்)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கு செப்டம்பர் மாதத்திற்குரிய பணம் தற்போது வழங்கப்படுகின்றது.

இப்பணம் மேற்படி உதவி அரசாங்க அதிபர் அலுவலக ஊழியர்களினால் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும் யாழ் செயலகத்திலும் வைத்து வழங்கப்படுகின்றது. (71)

# 25000 பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை கப்பலில் கொண்டுவர அனுமதி மறுப்பு

## 15,000 படிவங்கள் தேங்கிக்கிடக்கின்றன

(மானிப்பாய்)

யாழ் பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் இவ்வருடம் ஜனவரி முதல் செப்டம்பர் வரை கையேற்கப்பட்ட பதினையாயிரம் பிறப்பு அத்தாட்சிப் பத்திர விண்ணப்பப்படிவங்கள் தேங்கிக் கிடக்கின்றன.

1954 ம் ஆண்டின் பின் பிறந்தவர்களுக்கு எழுதிவழங்கப்படும் இருபக்கப் படிவங்கள் போதியளவு கொழும்பிலிருந்து இவ் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படாமையே இத்தேக்க நிலைக்கு காரணமென தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக கடந்த வருடம் கையேற்கப்பட்ட இருபத்தையாயிரம் விண்ணப்பப்படிவங்கள் இன்னொரு புறத்தில் தேங்கிக்கிடப்பதாகவும் தெரியவருகின்றது.

இப்படிவங்களை இங்குள்ள உத்தியோகத்தர் ஒருவர் வந்து பெற்று, லொறிமூலம் யாழ்ப்பாணம் கொண்டுசெல்லுமாறு கொழும்பிலுள்ள பதிவாளர் திணைக்களம் அறிவித்துள்ளதாகவும் கப்பல்மூலம் கொண்டு வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக மாவட்ட பதிவாளர் திரு. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக 1954 க்குப் பின் பிறந்தவர்களின் பிறப்பு அத்தாட்சிப்பத்திர விண்ணப்பப்படிவங்களை கையேற்பதும் கடந்த ஒரு மாதமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (71)

## இராசி பலன்

31-10-1991

வியாழக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 14)

நவமி ந.இ. 11-52 வரை.

ஆயிலியம் மு.இ. 3-45 வரை.

இராகுகாலம் பகல் 1-33 முதல் 3-03 வரை.

சுபநேரம் காலை 7-33 முதல் 9-03 வரை.

சித்தாமிர்தயோகம்.

மேடம்: வீண்விரோதம், மனச்சஞ்சலம், தாழ்ந்தநிலை.

இடபம்: தொழில்முயற்சி, அதிகவருவாய், பாராட்டு.

மிதுனம்: பணமுடை, வாக்குக்கலகம், வீண்தொல்லை.

கடகம்: காரியசித்தி, தானதர்மம், பாராட்டு.

சிங்கம்: அடிமைநிலை, அகங்காரம், குடும்பபிரிவு.

கன்னி: மேலோர் சகாயம், தொழில்வெற்றி, பயணம்.

துலாம்: தொழில்நாட்டம், புதிய முதலீடு, புகழ்.

விருச்சிகம்: கடன்தொல்லை, தனிமைப்படல், வெறுப்பு.

தனுசு: அன்னியர் துன்பம், வேதனை, அலைச்சல்.

மகரம்: வேலைப்பழு, சகோதரர் வெறுமதி, உற்சாகம்.

கும்பம்: தொழில்லாபம், அதிகாரசிறப்பு, கல்விச் சிறப்பு.

மீனம்: மனப்போராட்டம், புத்திரர்கவலை, இனசனபகை.

ஜோஸ்யர்

லங்கா சீமெந்து நிறுவன

# தொழிலாளருக்கு 4 மாதம் சம்பளம் இல்லை

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவன தொழிலாளர்களுக்கு கடந்த சில மாதங்களாக எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படாமையால் அவர்கள் பெரிதும் கஷ்டமுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கையால் லங்கா சீமெந்து நிறுவனம் சேதமடைந்ததையடுத்து சில மாதங்கள் தொழிலாளர்களுக்கு முழுச்சம்பளம் வழங்கப்பட்டது. பின்னர் அரைச் சம்பளத்தில் மூன்றில் ஒரு பகுதி என்று குறைந்து கடந்த 4 மாதங்களாக எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (86)

அகதி முகாமில்

# இடம்பெயர்ந்தோர் சிரமதானப்பணி

(புங்குடுதீவு)

தீவுப்பகுதியில் இடம்பெற்ற இராணுவநடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் தங்கியிருக்கும் மக்கள் தங்களின் சுகாதார வசதியை கருத்திற்கொண்டு அப்பாடசாலையை சிரமதான முறையில் துப்பரவு செய்யும் வேலையை நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளார்கள்.

அங்கு தங்கியிருக்கும் சுமார் ஆயிரக்கணக்கான மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து சிரமதானத்தை நடத்தினார்கள்.

இதேவேளை அங்குள்ள மக்கள் தங்களின் சுகாதாரவசதிகளை நல்லமுறையில் பாதுகாப்பதற்காக ஒரு குழுவொன்றும் அங்கு ராரிப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. (101)

கரையோர கப்பல் ரோந்து சேவை

# நடத்த ஏற்பாடு

(சென்னை)

இலங்கைத்தமிழ் தீவிரவாதிகள் தமிழ்நாட்டிற்குள் பிரவேசிப்பதை தடுக்கும் நடவடிக்கையாக கரையோரப் பகுதிக் கப்பல் ரோந்து சேவை ஏற்பாடு செய்வதுபற்றி இந்திய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் எஸ். கிருஷ்ணகுமார், கடற்படைத் தளபதி அட்மிரல் எல். ராமதாஸ் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்கள்.

ரஷ்யாவிலிருந்து

# 350 தொன் தங்கம் வெளிநாடுகளுக்கு கடத்தல்

(மாஸ்கோ)

ஒருசில மாதங்களுக்குள் 350 தொன் தங்கம் ரஷ்யாவிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சோவியத் ரஷ்யாவின் தங்கக் கையிருப்பு வெகுவாகக் குறைந்துள்ளது பற்றி ரஷ்யக் குடியரசு ஜனாதிபதி யெல்ஸ்ரின் கருத்துத்தெரிவிக்கையில், அண்மையில், சதிப்புரட்சி மூலம் 3 நாட்கள் பதவியிலிருந்த 8 பேரடங்கிய அவசரகால குழுவினர் மேற்படி தங்கங்களை வெளிநாடுகளுக்கு கடத்தியிருக்கக்கூடும் எனக் கூறினர். (வி)

கற்சிலைமடுவில் இன்று

# பண்டாரவன்னியன் நினைவுதின விழா

(ஒட்டுசுட்டான்)

கற்சிலைமடுவில் இன்று நடைபெறவுள்ள பண்டாரவன்னியன் நினைவுதினவிழாவில் பல கலைநிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

பண்டாரவன்னியன் நினைவு நாள் நிகழ்ச்சிகள் ஒட்டுசுட்டான் நகரிலிருந்து 2 மைல் தூரத்தில் உள்ள கற்சிலைமடு என்னும் கிராமத்தில் அமைந்துள்ள கல்வெட்டின்முன்றலில் இடம்பெறுமென பண்டாரவன்னியன் அறக்காவல் குழுவினர் தெரிவித்துள்ளனர். (144)

# தமிழீழ காவல்துறையினர் வீதிகளில் கடும் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ள தமிழீழ காவல் துறையினைச் சேர்ந்த பெண் படையினர் கொட்டும் மழையையும் பாராது மிகத் தீவிரமாக கடமையில் ஈடுபட்டனர்.

போக்குவரத்து வாகனங்களை மறித்து பொதிகள், பாரிசல்கள் ஆகியவற்றைக் கடும் சோதனை செய்தனர்.

யாழ். நகரில தினமும் தங்கள் கடமையை மேற்கொண்டு வருகின்றனர். (56)

# விவசாயிகளுக்கு விதை வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினரால் யாழ் மாவட்டத்தில் ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவில் பத்துவிவசாயிகளுக்கும் ஐந்து வீட்டுத் தோட்ட உரிமையாளருக்கும் விதை தானியம், மரக்கறி விதைகள் மற்றும் சிறுதானிய விதைகள் வழங்கப்படவிருக்கின்றன.

இதுசம்பந்தமான பெயர் விபரங்களை உதவி அரச அதிபர் பிரிவுச் செஞ்சிலுவைச் சங்க கிளைகளிடம் யாழ். செஞ்சிலுவைச்சங்க செயலாளர் கேட்டுள்ளார்.

தோட்ட மேற்பார்வையாளர்களை கவனிப்பதற்கு ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவு செஞ்சிலுவைச் சங்க கிளைகளிலிருந்து ஐந்துதொண்டர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிகள் செஞ்சிலுவைச்சங்க காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. [56]

## தூக்குத் தண்டனையை தடை செய்ய முடியாது

(புதுடில்லி)

இந்தியாவில் தூக்குத் தண்டனை வழங்குவதைத் தடை செய்யமுடியாது என இந்திய தலைமை நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

தூக்குத்தண்டனை வழங்கப்படுதல் அநாகரிகமான காட்டுமிராண்டித்தனமான ஓர் நடவடிக்கை எனவும் இத்தண்டனையை நீக்கும்படியும் கோரி சிறையிலிருக்கும் காஷ்மீர் முஸ்லிம் போராளியின் மனைவி வழக்குத் தாக்கல் செய்ததைத் தொடர்ந்தே இந்தியத் தலைமை நீதிமன்றம் மேற்படி உத்தரவை வழங்கியது. (௧)

## கூட்டம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சன சமூக நிலையங்களின் சமாஜத்தின் செயற்குழுக் கூட்டம் சமாஜத் தலைவர் திரு. வ. செல்லராசசிங்கம் தலைமையில் நவம்பர் 3-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் மரம் நாட்டும் வைபவம், வீட்டுத் தோட்டப் போட்டி, மாவீரர் தினம் ஆகிய பல்வேறு விடயங்கள் பற்றி ஆராய்ந்து தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (72)

## விளக்கெரிக்க, வெளியே செல்ல

# எழுவைதீவு மக்களுக்கு தடை

(யாழ்ப்பாணம்)

எழுவைதீவு 5ம் வட்டாரத்தில் இருந்து மூவர் கடற்படையினரால் காங்கேசன்துறைக்குக் கொண்டுவரப்பட்டு, பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் மூலம் காங்கேசன்துறையில் இருந்து குமணகப்பலில் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் வைத்து மூவரில் ஒருவரான அவ் இடத்தைச் சேர்ந்த பொம்மூக்குட்டி பொன்னுத்துரை (60 வயது), அப்பகுதி நிலைமை குறித்துக் கூறுகையில்;

எழுவைதீவில், கடற்படையினர் பகல், இரவு நேரங்களில் மக்கள் எவரையும் வெளியே செல்லக்கூடாது எனக் கூறியுள்ளனர். உறவினர்களைக் கண்டால் பேசவோ கதைக்கவோ முடியாத நிலையில் உள்ளோம்; இரவில் வீட்டுக்குள் விளக்கு எரிக்கக்கூடாதென்றும் படையினர் எச்சரித்துள்ளனர்.

உணவுக்கும் பெரும் கஷ்டம் ஏற்பட்டுள்ளது; இதுபற்றிப் படையினரிடம் முறையிட முடியாத நிலையில் மக்கள் உள்ளனர். கடந்த இரண்டு நாட்களாகப் பெய்த கடும் மழையினாலும், குளிரினாலும் தொய்வு, காய்ச்சல், தடிமன், சளி, வயிற்றுளைவு போன்ற நோய்களினால் பீடிக்கப்பட்டவர்கள், மருந்து வகைகளைப் பெறமுடியாத நிலையேற்பட்டுள்ளது. இந்நோய்களுக்குச் சிகிச்சை வசதிகள் எதுவும் இல்லையெனப் படையினர் கைவிரிக்கின்றனர்.

இந்நிலையில், நிறைமாதக் கர்ப்பிணிகள் பிரசவத்தினை எதிர்நோக்கி இருப்பதாகவும் தெரிவித்த அவர், தமது மகள் பிரசவத்திற்காக இம் மாதம் 28ம் திகதியிலிருந்து வேதனைப்பட்டதாகவும், இது பற்றிக் கடற்படையினரிடம் முறையிட்டபோது அவர்கள் இதனை உதாசீனம் செய்தனர். பின்னர் நேற்றுக் காலையே கடற்படையினர் யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்கான அனுமதியினை வழங்கி அதன் பின்னரே இங்குவந்து சேர்ந்ததாகவும் தெரிவித்தார்.

கர்ப்பிணிப்பெண்ணான திருமதி பத்மராஜ் தோமின் (34 வயது) இவரது தந்தையாரான பொம்முக்குட்டி பொன்னுத்துரை, செல்வநாயகி பொன்னுத்துரை (55வயது) ஆகியோரே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளவர்களாவர். (56)

## மழைக்கு 21 பேர் பலி!

[சென்னை]

தமிழகத்தில் தற்பொழுது பெய்துவரும் அடைமழையால் 11 குழந்தைகள் உட்பட 21 பேர் பலியாகியுள்ளனரென்று தெரிவிக்கப்படுகிறது. (ஈ)

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

எட்டுப் பிள்ளைகளின் தந்தை ஒருவர் வீட்டில் கயிற்றில் சுருக்கிட்டு உயிரைப் போக்கிக்கொண்டுள்ளார்.

தெல்லிப்பளை கிழக்கு அம்பனையைச் சேர்ந்த 44 வயதான ஆறுமுகம் வன்னியசிங்கம் என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவர். (56)

## போர்க்கால கூட்டம்

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சிப் பிரிவிலுள்ள பளை மகாவித்தியாலயத்தில் இன்று மாலை 7-30 மணிக்கு போர்க்கால விளக்கவுரைக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் தமிழீழவிடுதலைப் புலிகளின் நிதிப்பொறுப்பாளர் திரு. தமிழேந்தி, யாழ். மாவட்ட மக்களுறவுகொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி (ஆஞ்சி), விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி தலைமைச் செயலகத்தை சேர்ந்த செல்வி சந்திரிகா அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரிவில் இயங்கும் மக்கள் வங்கி, இலங்கை வங்கி உட்பட அரச திணைக்கள அதிகாரிகள், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை சாவகச்சேரி றிபேக் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் மேற்குறித்த அதிகாரிகள், ஊழியர்கள் அனைவரையும் அதில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்பு பிரிவினர் கேட்டுள்ளனர்.

## மாதாந்த கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட [காரைநகர் தவிர்ந்த] கிராமசேவை அலுவலர் பிரிவுகளில் மாதாந்த அரசாங்க உதவிப்பணம் பெறுபவர்களின் புரட்டாதி மாதக்கொடுப்பனவு யாழ்ப்பாணம் அடைக்கலமாதா கோவிலில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு வழங்கப்பட உள்ளது.

## வடக்கில் க. பொ. த.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உகந்த சூழ்நிலை காணப்படுவதாக அறிவிக்கப்பட்டால் மாத்திரமே, இப்பரீட்சை நடத்தப்படுமெனப் பரீட்சை ஆணையாளர் திரு. ஆர். வெத்தசிங்க ஏற்கனவே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (152)

## வடக்கில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

என்பது குறித்தோ அவர்கள் தகவல் எதனையும் வெளியிடவில்லை.

இதேவேளையில் வடக்கு - கிழக்குப்பகுதிகளில் புலிகளுக்கும் அரசபடையினருக்கும் இடையில் நேற்றும் கடும் மோதல்கள் இடம்பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஈ)

# பெற்ற குழந்தையை கொன்ற தாய்

(யாழ்ப்பாணம்)

மனநோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த இளம் தாய் ஒருவர் தான் பெற்ற ஒரே ஒரு மகனை நிலத்தில் தூக்கி எறிந்து கொன்ற சம்பவம் நேற்றுக்காலை மீசாலையில் இடம் பெற்றுள்ளது.

சாவகச்சேரி மீசாலையைச் சேர்ந்த பிறேமரஜினி சந்திரகுமார் என்ற ஒரு வயதுக் குழந்தையே இம்மரணத்திற்குள்ளானது.

இக்குழந்தை தலையில் பலத்த காயத்துடன் யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்துவரப்படுகையில் இடைவழியில் மரணமானது. (56)

## யாழ். குடா பற்றி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எதுவும் கொடுப்பதில்லை. ஆனால் நாம் இப்படியான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு முன் பொதுமக்களை எச்சரிக்கை செய்யும் விதமாக முன்னறிவித்தலை வழங்கிவருகிறோமென்றும் சொப்பேகடுவ தெரிவித்தார்.

## மீண்டும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

1988 1989ம் காலப் பகுதிகளில் அரசாங்கம் மேற்படி இயக்கத்தினருக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கையின்போது தப்பித்துக் கொண்ட ஒருசில முக்கிய புள்ளிகளே தற்போது ஜே. வி. பி.யை மீண்டும் இயக்குவதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக இயங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# புதிய கடற்படையணி தமிழகம் வரும்

(சென்னை)

"தமிழகத்தில் வேரூன்றி இருக்கும் விடுதலைப் புலிகளின் பிரச்சனை, ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதியே மத்திய அரசு செயற்படும்" என மத்திய பாதுகாப்பு இணை அமைச்சர் திரு. கிருஷ்ண குமார் நேற்றுத் தெரிவித்தார்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுடன் நடைபெற்ற சந்திப்பின்பின் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தமிழகத்தில் தடுக்கும் வகையில் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. தேவை ஏற்படின் புதிய கடற்படை அணிகளைத் தமிழகக் கடற்கரையோரத்தில் நிறுத்தவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார். (ஈ)

## இராணுவ உதவி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டதாகக் கடற்படைத் தளபதி மீது பத்திரிகைகள் குற்றம் சாட்டியுள்ளன.

இதனை வன்மையாக மறுத்த தளபதி, இரு நாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று இருப்பதாகவும், ஆனால் கடற்படையின் ஒழுங்கை மீறவில்லை என்றும் கூறினார். (சி)

# தமிழக அமைச்சர் பதவி நீக்கப்பட்டா[ர்]

(சென்னை)

தமிழக உணவுக்கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. ராஜாராம் முதலமைச்சரினால் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

இவரது அமைச்சர் பொறுப்பை திரு எஸ் விஸ்வநாதன் நாளை பொறுப்பேற்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ராஜாராம் என்ன காரணத்திற்காக பதவி நீக்கப்பட்டார் என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ஈ)

# இலங்கை தமிழர் கோரிக்கை[...]

## ஐரோப்பிய நீதிமன்று நிராகரித்தது

(லண்டன்)

பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றில் இலங்கைத் தமிழர்கள் ஐவர் தாக்கல் செய்த வழக்கை அந்த நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரி இந்த ஐந்து தமிழரும் 987-ம் ஆண்டு விண்ணப்பித்திருந்தார்கள் எனினும் இந்த கோரிக்கையை நிராகரித்த பிரிட்டிஷ் அரசு இவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பியது.

இலங்கையில் தாம் இந்திய இலங்கைப் படையினரால் மோசமாக தாக்கப்பட்டதுடன் அவமரியாதைக்குட்படுத்தப்பட்டதாக இவர்கள் [...] வித்ததையடுத்து மீண்டும் இவர்கள் பிரிட்டனில் த[...] அனுமதிக்கப்பட்டனர்.

தாங்கள் தாக்கப்பட்ட[...] கும் அவமானப்படுத்தப்[...] தற்கும், பிரிட்டிஷ் அரசே காரணம் என[...] இவர்கள் மனித உரிமைகளு[...] கான ஐரோப்பிய நீதி[...] றில் வழக்கு தாக்கல் செய்[...] தனர். இதனையே நேற்று [...] நீதிமன்றம் நிராகரித்தது.

எனினும் இந்த ஐவரும் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் எனவும், இதுபற்றி விரை[வில்] முடிவெடுக்கப்படுமென[வும்] பிரிட்டிஷ் அரசு கூறியுள்ள[து]. (சி-[...])

## புலிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களை புலிகளுக்கு தாம் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினூடாக அனுப்பியதாகவும் அந்த யோசனைக்கான பதிலை, விடுதலைப் புலிகள் இதுவரை தமக்கு அனுப்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

புலிகளின் பதிலைப் பொறுத்தே, தமது அடுத்த நடவடிக்கை அமையுமென்றும் அவர் தெரிவித்தார். (சி)

## இந்திய

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வார், எப்போது வருவார் என்ற விபரங்களை பாதுகாப்பு காரணமாக கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் வெளியிட விரும்பவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அவர் இலங்கையில் குறைவானநேரமே தங்கியிருப்பாராம்.

இம்மாநாட்டில் திரு. நரசிம்மராவ் கலந்து கொள்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [153]

## கொழும்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாச ஹோட்டல்கள் ஒதுக்கப்பட்டதைத் தொடர்ந்து, நேற்று முதல் பொதுமக்கள் இவற்றைப் பயன்படுத்த இயலாது என்று தெரிவிக்கப்படுகிறது.

மாநாட்டிற்கு வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், கண்டி மாநகருக்கும் விஜயஞ்செய்வார்கள் என்று தெரியவருகிறது. இதையடுத்துக் கண்டிப் பகுதியிலும் மேலதிகப் பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட உள்ளன. [153]

## புரண்ட்லைன் மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் நாள் இரு மலையான மாந்திரீகர்களுடன் பாராளுமன்றம் சென்ற ஜனாதிபதி சகல இருக்கைகள் மீதும் ஒருவித எண்ணெயை பூசியதாக 'புரண்ட்லைன்' சஞ்சிகைக்கு திருமதி சிறிமா பேட்டியளித்திருந்தார்.

இந்தியாவின் 'தேசிய சஞ்சிகை' எனக் கருதப்படும் 'புரண்ட்லைன்' சஞ்சிகை உண்மையை அறியாது, கேடு விளைவிக்கக்கூடிய இக்கருத்தை வெளியிட்டது கவலைக்கு உரியது என்று ஜனாதிபதியின் செயலர் திரு. விஜயதாஸா, 'புரண்ட்லைன்' ஆசிரியர் திரு. ராமுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (சி)

## 15 படையினரை

(1ம் பக்கத் தொட[ர்ச்சி])

15 படையினர் [...] போனதாகவும் இ[...] ரங்கள் தெரிவித்தன[...]

இவர்களைக் கண்[...] பெருமளவு படையி[...] னப் படையின் உ[...] தேடிவருவதாகவும் [...] கப்படுகிறது.

## அகதிகளுக்கு சமையல் பாத்திரம்

(சித்தன்கேணி[...])

தொல்புரம் அகதி[...] களில் தங்கியுள்ள [...] களுக்கு சமையல்[...] கள் வழங்குவதற்[...] டிக்கை எடுக்கப்[...]

தொல்புரத்தில[...] ளில் தங்கியிருக்கு[...] 750 குடும்பங்களுக்கு[...] யல் பாத்திரங்கள் [...] தற்கு சங்கானை உதவி [அர]சாங்க அதிபரிடம் கோ[...] விடப்பட்டுள்ளது. ([...])

## கடற்படை தளப[தி] ஓய்வுபெறுகிறா[ர்]

(கொழும்பு)

இலங்கைக் க[டற்படை] தளபதி வைஸ் அ[ட்மிரல்] ஆனந்த சில்வா, தமது [பதவி]யில் இருந்து இன்றுடன் [ஓய்வு] பெறுகிறார்.

38 வருடங்களாகச் [சேவை] ஆற்றிய இவர், அ[...] காலமாக ஜனாதிப[தி] தமது பதவி குறித்துச் [...] சையில் ஈடுபட்டிரு[...] தெரிந்ததே.

## குமண கப்[பல்] வந்தது

(யாழ்ப்பாண[ம்])

குமணகப்பல் நேற்று [...] 10 மணியளவில் பருத்தித்[...] துறை முகத்தினை வந்த[டை]தும் கடல் கொந்தளி[ப்பு] மத்தியிலும் பொருட்கள் [இறக்]கும் வேலை மிகத் துரி[தமாக] நடைபெற்றது.

இக்கப்பலில் தானிய[ங்]கள், மருந்துவகைகள், உ[...] பொருட்கள் எரிபொருட[்கள்] வந்துள்ளதாகவும் நே[ற்று] மாலை வரை மருந்துப்பொ[ருட்]களும், எரிபொருட்க[ளும்] இறக்கப்பட்டதாகவும் [தெரி]விக்கப்பட்டுள்ளது. [152-[...]]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்ரோபர்31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paperat the General Post Office Sri Lanka under Licence Number B/[illegible]/91